**சுருக்கம்**

தொடக்கக் கல்வி- 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளை 2004-2005ஆம் கல்வி ஆண்டு முதல் தேக்கம் இல்லாமல் தேர்ச்சி அடையச் செய்வது- ஆணை- வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (சி2) துறை**

அரசாணை (நிலை) எண்.64
நாள். 19-06-2004

படிக்கப்பட்டவை:-

1). அரசாணை (நிலை) எண்.525, கல்வித்துறை, நாள் 15.3.1978.

2). அரசாணை (நிலை) எண்.594, கல்வித்துறை, நாள் 3.7.1992.

3). மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம் கடிதம் எண்.1103/ஷிஷிகி-ஞிமீமீ/2002 நாள் 7.5.2002.

4). தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 17724/இஎச்3/02 நாள் 9.5.2002.

- - - - -

ஆணை:-

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் இளம் குழந்தைகள் மனதில் தேர்வு என்ற அச்சம் நீங்கி, கல்வி கற்றலின் இனிமையை உணர்ந்து, தொடர்ந்து கல்வி கற்பது மிக அவசியம். தேர்ச்சி இல்லாமல் தேக்கம் அடையச் செய்வதால், குழந்தைகளின் மனநிலை பாதிப்பதோடு பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திவிட்டு சிறு வயதிலேயே வேலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதனை தடுத்து நிறுத்தினால் மட்டுமே, 'அனைவருக்கும் கல்வி' என்ற நோக்கத்தை உறுதி செய்ய இயலும்.

2. இதனை அரசு கவனமாக ஆராய்ந்து, அனைத்து அரசு (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் வனத் துறையின் கீழ் உள்ள பள்ளிகள் உட்பட), ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், 1 முதல்

5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, 75 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால், தேக்கமின்றி தேர்ச்சி அளிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாணையானது 2004-2005ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரும் (அதாவது 2004-2005ல் 1, 2, 3, 4, 5 வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள், 2005-2006ல் 2, 3, 4, 5, 6 வகுப்புகளுக்கு தேர்ச்சி பெற்றதாக கருதி, வரும் ஆண்டுகளிலும் அதே போல் தேர்ச்சி வழங்கலாம்).

3. தேக்கமின்றி தேர்ச்சி அளிக்க ஆணையிடும் அதே நேரத்தில், ஆரம்பக் கல்வியின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுவதும் உறுதி படுத்தப்பட வேண்டுமெனவும் அரசு கருதுகிறது. எனவே இதனை நன்முறையில் செயல்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை கையாள அரசு ஆணையிடுகிறது:-

- காலாண்டு, அரையாண்டு மற்றும் இறுதித் தேர்வுகள் முறையாக நடத்தப்பட வேண்டும்.

- மெதுவாகக் கற்கும் மாணவ, மாணவிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

- வட்டார வள மைய அலுவலர்கள் மூலம், ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் திறன் கண்காணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வட்டார வள மைய அலுவலர்களிடத்தில், வள மையக் கட்டுப்பாட்டில் வரும் பள்ளிகளை ஒவ்வொருவருக்கும் 10 பள்ளிகள் வீதம் பிரித்து கொடுத்து அப்பள்ளிகளில் நடைபெறும் கற்றல், கற்பித்தல் முறைகளை கண்காணிக்கப்பட வேண்டும்.

- மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் / மாவட்டக் கல்வி அலுவலர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் இந்த நடைமுறைகளை முறையாக கூர்வு ஆய்வு செய்யவேண்டும்.

4. இவ்வாணையை செயல்படுத்த சம்பந்தப்பட்ட இயக்குநர்கள், தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கள அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கவும் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கு.ஞானதேசிகன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை-6.
ஆணையர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை-5.

இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் (மற்றும்) சிறுபான்மையினர் நல இயக்குநரகம், சென்னை-5.
இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம், சென்னை-5.
இயக்குநர், சமூக நல இயக்குநரகம், சென்னை-5.
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், சென்னை-15.
நகராட்சிகள் இயக்குநர், சென்னை-5.
மாநகராட்சி ஆணையர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர்.

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, சென்னை-9.
சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்-II, சென்னை-9.
மாண்புமிகு கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
தனி அலுவலர், மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
பொதுத் (எஸ்.சி.) துறை, சென்னை-9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்,